
# தமிழ் மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழா 2017




# TAMIL PARA SPORTS 2017

**கிழக்கின் போட்டிகள் : மட்டக்களப்பு** PARA SPORTS OF EAST : **Batticaloa**

**வடக்கின் போட்டிகள் : கிளிநொச்சி** PARA SPORTS OF NORTH : **Kilinochchi**

**விழிப்புலன் அற்றோருக்கான கிரிக்கட் போட்டி : யாழ்ப்பாணம்** SOUND BALL CRICKET : **Jaffna**

www.tamilparasports.com tamilparasports admin@tamilparasports.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சக்கர நாற்காலி
மரதன் ஓட்டப் போட்டிகள்
**Wheelchair Marathon**













அனைத்து மாற்றுத் திறனாளிகம
களம் காண்கின்றார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















## விழிப்புலன் அற்றோருக்கான சத்தப்பந்து கிரிக்கட் போட்டிகள்

**Cricket for Visually Impaired**






ஞம்

**www.tamilparasports.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தை நோக்கி மாற்றுத் திறனாளிகள் எனும் தொனிப்பொருளில்,

# மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழா 2017




**நாங்கள் தமிழ் மாற்றுத்திறனாளிகள் பேசுகின்றோம்.**

போர் தாண்டவமாடிய பூமியில் அந்த போரின் வடுக்கள் நாங்கள், வலிகள் நாங்கள்.

நீங்கள் இந்த மண்ணை கடந்து செல்லும்போது எங்கோ ஒரு திசையில் ஒரு சக்கர நாற்காலி நகர்ந்துகொண்டிருக்கும், அதே சக்கரநாற்காலியில் ஒரு மாற்றுத்திறனாளி நகர்ந்துகொண்டிருப்பார். பார்வையை இழந்த ஒருவர் வெண்பிரம்பின் துணையோடு நடந்துகொண்டிருப்பார். கைகள் இல்லாதவர்கள், கால்கள் இல்லாதவர்கள் என்ற ஒரு பெரும் சமூக கூட்டம் உங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

மாற்றுத்திறனாளிகள் என்றால் மற்றவர்களில் தங்கி வாழ்பவர்கள், மற்றவர்களின் உதவியோடு வாழ்பவர்கள் என்ற பொதுவான கருத்திலிருந்து மீண்டு, நாமே நமக்கு உதவி புரிந்து வாழும் ஒரு நிலையை நோக்கி நாங்கள் நகரவேண்டுமென்று துடிக்கிறோம்.

அந்த முயற்சியின் ஒரு கட்டமாக , 2016ம் ஆண்டு, வடக்கிலும் கிழக்கிலும் வாழும் அனைத்து மாற்றுத்திறனாளிகள் பங்குகொள்ளும் ஒரு விளையாட்டுப் போட்டியினை நடத்தினோம். அது ஒரு சாதாரண விளையாட்டாக கருதிவிட முடியாது. அது எங்களை, எங்களை போன்றவர்களை ஒரு மைதானத்துக்குள் கொண்டுவந்தது. எமது வாழ்வில் அடுத்த கட்டத்தை நோக்கி செல்வதற்கு ஒரு உந்துகோலாக இருந்தது.

சென்ற ஆண்டு விளையாட்டு விழாவானது ஒரு புதிய தசாப்தத்தின் தொடக்கம், நாம் பல்வேறு நன்மைகளை அடைந்தோம்.

1. முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட அனைவரும் ரூபா 10,000.00 மாதாந்த திட்டத்தில் இணைக்கப் பட்டனர்

2. பல்வேறு அங்கம் பாதிக்கப்பட்டோருக்கு மாதா மாதம் ரூபா 5000.00 வழங்கும் திட்டத்தில் பலர் உள்வாங்கப்படுகின்றார்கள்

3. மட்டக்களப்பில் 14 பிரதேச செயலகப்பிரிவுக்குள் செயற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சிறு அமைப்புக்கள் ஒன்று கூடி மட்டக்களப்பு மாற்றுத் திறனாளிகள் சம்மேளனம் உருவாகியது

4. மாற்றுத் திறனாளிகள் தொடர்பான புதியதோர் விழிப்புணர்வு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல நன்மைகளை கண்ட நாம் இந்த விளையாட்டு போட்டியினை மீண்டும் 2017 நடாத்துகின்றோம்.

இப்போட்டிகளை DATAவுடன், நம்பிக்கை ஒளி அமைப்பு மற்றும் ஐ.பி.சி தமிழ் இணைந்து நடாத்துகின்றன. இந்த போட்டிகளை நாமே தலைமை ஏற்று நடாத்துகின்றோம், நாமே அவற்றை ஒருங்கிணைக்கின்றோம்.. இயலாதவர்கள், ஏலாதவர்கள், அங்கம் இழந்தவர்கள் என்ற நிலை மாறி வருவதை நாம் உணர்கின்றோம்.

ஒருபுறம் மாற்றுத் திறனாளிகள் பலர் நல்ல பலன்களை பெற்று , இன்று தாம் சுயமாக தொழில் செய்ய முயல்கின்றார்கள். அவர்களின் சாதனைகளை கண்டு பூரிப்பு அடைகின்றோம்.

அதேவேளை வாழ்வாதாரமும் இன்றி உழைக்கும் சக்தியும் இன்றி உறவுளும் இன்றி , உடல் உறுப்புகள் பலவும் சிதைவுற்று , தெருவோரம் யாசித்து வாழும் மாற்றுத் திறனாளி சகோதரர்களுக்காகவும் நாம் இன்று உங்கள் முன்பிருந்து பேசுகின்றோம்.

ஒரு மாற்றுத் திறனாளியின் பிள்ளைகளின் நிலை சொல்லவும் வேண்டுமோ...

மாற்றுத் திறனாளிகளுக்கான திணைக்களங்கள் இருக்கின்றன. பல தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. பூமிப்பந்து முழுவதும் எமது உறவுகள் இருக்கின்றார்கள். ஆனாலும் இன்னமும் பல மாற்றுத் திறனாளிகள் வாழ்வு இருண்ட சூனியமாக இருப்பது கவலை தருகின்றது. இதுதான் யதார்த்தம்.

**நம்மில் எத்தனை மாற்றுத் திறனாளிகள் இருக்கின்றார்கள் ?**

**அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் ?**

**அவர்களுக்கு வாழ்வு இனி எப்படி செல்லப் போகின்றது?**

**அவர்களின் பிள்ளைகளின் நிலை என்ன?**


**இவை எல்லம் விடை தெரியாத கேள்விகளா ?**

**இல்லை விடை வேண்டாம் என்று விடப்பட்ட கேள்விகளா?**

இவ்வாறு நொந்து வெந்து வாழ்வைக்கழிக்கும் ஒரு சமூகக் கூட்டம் அதன் அடுத்த படிநிலை நோக்கி செல்கின்றது. நாம் ஒரு பேசு பெருளாக வரவேண்டும். மாற்றுத் திறனாளி ஒரு பேசு பொருளாக வரவேண்டும். எமது சக்கர நாற்காலி முன்னோக்கி நகர வேண்டும், அது எம் மரணம் வரை சுற்றி சுழல வேண்டும்.

அதன் அடுத்த கட்டமாக இம்முறையும் நாம் ஒரு பிரமாண்டமான தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு போட்டியை கிளிநொச்சியிலும் மட்டக்கிளப்பிலும் நடாத்த விளைகிறோம்.

இது ஒரு சாதாரனமான விளையாட்டு போட்டி இல்லை. இயலாதே என்று ஒதுங்கியவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும் தம்மாலும் இயலும் என்று கூறி களம் காணும் ஒரு அற்புத திருவிழா.




இன்றிலிருந்து 3 மாதங்கள் நாம் கவலைகளை மறந்து போட்டிகளுக்காக உழைக்கப்போகின்றோம். மாவட்டம் தோறும் வந்து எமது சக மாற்றுத் திறனாளிகளை இனம் கண்டு மைதானம் அழைத்து வருவோம்.

முறையான உடற்பயிற்சியின்மையும், விழிப்புணர்வு இன்மையும் எம்மில் எத்தனையோ பேரின் உயிரை காவு கொண்டு விட்டது.

இவற்றிலிருந்து மீண்டு நாம் மகிழ்வாக ஓர் விழாவை நடாத்துகின்றோம். இவ்வகையான விளையாட்டுப் போட்டிகள் எமக்கு முறையான உடற்பயிற்சியையும் விழிப்புணர்வையும் தரும்.

கடல்கடந்துபோய் புலம்பெயர்தேசத்தில் வாழும் எமது உறவுகளின் அன்பால் அவர்கள் தரும் ஆக்கத்தினால் இந்த விளையாட்டு போட்டி நடைபெறுகின்றது. எம்மண்ணிலே வாழும் நீங்கள், எம்மீது பொழியும் அன்பும் இந்த விளையாட்டுப் போட்டிக்கு பெரும் அணி சேர்க்கிறது.

**அங்கம் தளரினும் நெஞ்சம் தளராது என சங்கம் முழங்கு தமிழே...**

**மாற்றத்தை நோக்கி மாற்றுத் திறனாளிகள்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளின் மனங்களில் இருந்து...

*தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினால் - Differently Able Tamils Association (DATA), மாற்றுத் திறனாளிகளுக்கிடையிலான வருடாந்த விளை யாட்டுப்போட்டிகள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறுகின்றன.*

*2016ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டிகள் இம்முறை ஆனி மாதம் 24ம் திகதி முதல் ஆவணி மாதம் 6ம் திகதி வரை பல்வேறு கட்டங்களாக நடைபெறுகின்றது.*

## தமிழ் மாற்றுத் திறனாளிகள்

இலங்கைத் தீவில் தாண்டவமாடிய போரும் , இயற்கை அனர்த்தமும் , விபத்துக்களும் எம்மில் பலரை மாற்றுத் திறனாளிகளாக ஆக்கி இருக்கின்றன. அவர்கள் அனைவரையும் நோக்கி பயணிக்கும் ஒரு முயற்சியாகவே இந்த விளையாட்டு போட்டிகள் நடாத்தப்படுகின்றன. அவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு இப்போட்டிகள் ஒரு உத்வேகத்தை அளிக்கின்றது.

எம்மில் எத்தனை பேர் மாற்றுத் திறனாளிகள் ஆகி உள்ளார்கள்? அவர்களின் வாழ்வும் வலியும் எவ்வாறு உள்ளது? அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எத்தகையவை? அவர்கள் அவர்களது முன்னேற்றத்திற்கான குரலாக இயங்கவேண்டும்.... முயல்வார்களா? இவ்வாறான பல கேள்விகளோடு நாம் பயணிக்க வேண்டி உள்ளது.

### இப்போட்டிகள் எங்கே நடைபெறுகின்றன?

இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. வடமாகாணத்தின் போட்டிகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்தின் போட்டிகள் மட்டக்களப்பிலும் நடாத்தப்படுகின்றது. இப் போட்டிகள் ஆனி மாதம் முதல் ஆவணி மாதம் வரை பல்வேறு கட்டங்களாக நடாத்தப்படும்

### இந்த போட்டிகளை யார் நடாத்துகின்றனர்? இப்போட்டிகள் எவ்வாறு ஒருங்கிணைக்கப் படுகின்றன?

இப்போட்டிகள் அனைத்தும் தமிழ் மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படும். தமிழ் மாற்றுத் திறனாளிகளையும் , தமிழ் மாற்றுத் திறனாளிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக் களையும் ஒருங்கிணைக்குமுகமாக "தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு" உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் உயிரிழை, மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளனம் ஆகியவை தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பில் இணைகின்றன. மாற்றுத் திறனாளிகளை அவர்களின் பாதிப்புக்களின் அடிப்படையில் உப புரிவுகளாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள். இது அவர்களின் தேவைகள் குறித்தான புரிதலை மேம்படுத்தவும் அவர்களுக்கிடையிலான உறவுகளை விரிவாக்கவும் உதவுகின்றன.

1. **உயிரிழை** - முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும்

2. **விழிகள்** - விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அனைவரும், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களும் உள்வாங்கப்படுவார்கள்

3. **கரங்கள்** : கரங்களை இழந்தோர் மற்றும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் உள்வாங்கப்படுவார்கள்

4. **பாதங்கள்** : கால்களை இழந்தோர் மற்றும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் உள்வாங்கப்படுவார்கள்

5. **உள்ளம்** : உளவளம் பாதிக்கப்பட்டோர் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் உள்வாங்கப்டுவார்கள்

6. **ஓசை** : செவிப்புலன் பாதிக்கப்பட்டோர், மற்றும் பேச்சாற்றல் அற்றோர் உள்வாங்கப்படுவார்கள்.

தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்களாக தமிழ் மாற்றுத் திறனாளிகளே இருப்பர். அதன் நிறைவேற்றுக் குழுவிலும் தமிழ் மாற்றுத் திறனாளிகளே இருப்பர்.
அவர்களின் முயற்சிக்கு உறுதுணைவழங்கும் சமூக ஆர்வலர்கள் மாற்றுத் திறனாளிகளோடு இணைந்து பணியாற்றுவார்கள்

தற்போதைய நிலையில் வடக்கு மாகாணப் போட்டிகள் அனைத்தும் உயிரிழையின் ஒருங் கிணைப்பிலும் , கிழக்கு மாகாணத்தின் போட்டிகள் அனைத்தும் மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பிலும் நடைபெறும்.

### எவ்வாறான விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட இருக்கின்றன?

மாற்றுத் திறனாளிகளுக்கு பொருத்தமான விளை யாட்டு போட்டிகள் தேர்வு செய்யப்படும். விளை யாட்டு அலுவலர்கள், மருத்துவர்களின் வழி காட்டுதலில் போட்டிகள் தேர்வு செய்யப்படும். அவ்வாறான போட்டிகளுக்கு பயிற்சி வழங்கப்படும். பிரதானமாக,

1. விழிப்புலன் பாதிக்கப்பட்டோருக்கான கிரிக்கட் போட்டி

2. சக்கர நாற்காலி மரதன் போட்டிகள்

3. சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்ட போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாதங்களை இழந்தோருக்கான கரப்பந்தாட்ட போட்டி

5. மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப்போட்டிகள் என பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப் படுகின்றன.

**இப்போட்டிகளில் எத்தனை பேர் பங்கு பற்றுவார்கள் ?**

வடக்கு கிழக்கில் வாழும் அனைத்து மாற்றுத் திறனாளிகளும் அழைக்கப்படுவர்.

**இப்போட்டிகள் யாரால் மேற்பார்வையிடப்படும் ?**

மாகாண , மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், மருத்துவர்கள் இப்போட்டிகளை மேற்பார்வை செய்வார்கள்

**உங்கள் முன் உள்ள சவால்கள் என்ன ?**

எமக்கு முன் உள்ள மிகப்பெரும் சவால் - நிதி. இந்த விளையாட்டுப் போட்டியை நடாத்த நாம் நிதி சேகரிக்க உள்ளோம். எமது முயற்சியை எம் உறவுகள் நிச்சயம் வரவேற்பார்கள் என்பதில் எமக்கு எள்ளளவு சந்தேகமும் இல்லை. இதுவரை எம்மை ஊக்கப்படுத்தியவர்கள் எமது இந்த முயற்சியையும் ஊக்கப்படுத்துவார்கள் என நாம் திடமாக நம்புகின்றோம்

அடுத்த சவால் - மாற்றுத்திறனாளிகளை ஊக்கப் படுத்தி அவர்களை வெளிக்கொணர்தல், அவர்களுக் கான போக்குவரத்து என்பன முக்கிய மான சவால்களாக இருக்கும்

**இவ்வகையான போட்டிகளை இதற்கு முன் நாடாத்தி உள்ளீர்களா ?**

ஆம் நாங்கள் இவ்வாறான பல போட்டிகளில் முன்னர் பங்கேற்றிருக்கின்றோம் 2015ம் வருடம் ஒரு விளையாட்டுப்போட்டியை ஏற்பாடு செய்தோம், அதில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் மட்டும் கலந்து கொண்டனர். சக்கர நாற்காலிமரதன் ஓட்டம் , சக்கர நாற்காலி கூடைப்பந்து போட்டிகள் நடாத்தினோம்.

2016ம் ஆண்டு அனைத்து மாற்றுத் திறனாளிகளையும் இணைத்து மாபெரும் விளையாட்டு போட்டிகளை நடாத்தினோம். மிகவும் வெற்றிகரமாக நடந்த அந்த விளையாட்டு போட்டிகள் எமக்கு ஒரு உத்வேகத்தை தந்தது. இம்முறை நாம் அனைவரும் பங்கு கொள்ளும் விதமாக ஓர் விளையாட்டு போட்டியை ஏற்பாடு செய்கின்றோம்.

ஆரம்பதில் மாகாண அளவிலான விளையாட்டாக நடாத்தப்பட்டு , இனம் காணப்படும் வீரர்கள் தேசிய, சர்வதேச மட்ட போட்டிகளில் பங்கு பற்ற வழி வகை செய்யும் நோக்கோடு இந்த முயற்சிகளை எடுக்கின்றோம்.

**தமிழ் மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு தவிர்ந்த ஏனைய திறமைகளை எவ்வாறு வெளிக்கொண்டு வருவீர்கள்?**

விளையாட்டு தவிர்ந்த ஏனைய திறமைகளை வெளிப்படுத்த உதவும் போட்டிகள் இனி வரும் காலங்களில் நடாத்தப்படும்.

**இப்போட்டிகளில் யாரை சிறப்பு செய்வீர்கள் ?**

துன்பத்திற்கு துன்பம் கொடுங்கள் என டாக்டர். ஆ.பே.ஜே. அப்துல் கலாம் கூறியது போல துன்பம் மிகுந்த வாழ்விலும் அந்த துன்பத்தை தாண்டி சாதனை செய்வோர் இந்த விழாவில் சிறப்பு செய்யப்படுவார்கள்

**இப்போட்டியின் மூலம் நீங்கள் என்ன இலக்கை அடைய விரும்புகின்றீர்கள் ?**

நாம் இப்போட்டியினை நடாத்துவதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் இனம் காணப்படுவார்கள். அவர்களது திறமைகள் இனம் காணப்படும். அவர்களது தேவைகள் இனம் காணப்படும். மாற்றுத் திறனாளிகள் தொடர்பான ஒரு தகவல் திரட்டு உருவாக்கப்படும் அதன் மூலம் எமக்கு கிடைக்கும் உதவிகள் அனைத்தும் மிகவும் தேவையில் உள்ளவர்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடியதாக இருக்கும்

**இப்போட்டிகள் குறித்தான தகவல்களை எங்கே பெறலாம் ?**

*www.tamilparasports.com* எனும் இணையத்தில் இப்போட்டி குறித்தான தகவல்கள் அனைத்தும் காணக்கிடைக்கும்

**உங்களோடு நாம் எவ்வாறு இணைய முடியும் ?**

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்" என பாரதி கூறியதைப்போல உங்களால் முடியுமான பங்களிப்பை செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் வியாபார ஸ்தாபனங்களின் விளம் பரங்களை இந்த போட்டிகளுக்கு தாருங்கள் - ஒவ்வொரு போட்டிகளுக்கும் நீங்கள் அனுசரனை வழங்கவேண்டுமென நாம் கேட்டுக் கொள் கின்றோம். அதேவேளை நிதி தரக்கூடிய வழி வகைகள் அனைத்தையும் எமது உத்தியோக பூர்வ இணையத்தில் காணலாம்.

**நீங்கள் இதற்காக திரட்டும் பணத்தை எவ்வாறு உபயோகிப்பீர்கள்?**

நாங்கள் திரட்டும் பணம் இந்த விளையாட்டு போட்டிகளுக்கு பயன்படுத்தப்படும் அத்தோடு மாற்றுத் திறனாளிகளை நிருவாக ரீதியில் வளர்ப்பதற்கு பயன்படுத்தப்படும். மீதமான பணம் அனைத்தும் மாற்றுத் திறனாளிகள் தொழில் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவை வரிகளில்லை என் வலிகள்

எவ்வளவு
தூரம்
ஓடமுடியும்
என்பது
எனக்குத் தெரியாது
ஓடுவதாய்
நினைத்துக்கொண்டு
படுத்திருக்கவும்
என்னால்
முடியாது
உணர்விழந்த
என் கால்களுக்கு
நிகராய்
எதுவும் இருக்க
முடியாது
எனக்காய் ஓட
யாரையும்
நிற்பந்திக்கவும்
முடியாது
என் பயணத்தில்
என்றாவது ஒருநாள்
என் சக்கர நாற்காலியின்
சக்கரத்திலிருக்கும் காற்று
திடிரென வெளியேறும்
அப்போது இங்குதான்
ஒய்வெடுப்பேன்

அன்று என்
வாழ்வுக்கு சாட்சியாய்
நான் அமர்ந்திருந்த
என் சக்கரநாற்காலி
காலியாக என் கல்லறை மேலிருக்கும்

- நன்றி மன்னார் பெனில்

## மாற்றுத்திறனாளிகளின் முகப்புத்தகத்திலிருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம் ஒன்றே விடுதலை

விதியென்பார் பலர்
மதியால் வெல்லலாம் என்பர் சிலர்..
கவலைப்படும் நேரமதில் ஆறுதல் கூறுவோர் பலர்
இருப்பினும் தாங்கமுடியுமா எம் வலியினையும்
சோகத்தினையும்...
வலிக்க வில்லை சக்கர நாற்காலியில் இருப்பது
வலிக்கின்றது பலர் பாவம் என்கின்ற வார்த்தைகள்
வலிகள் தான் வாழ்க்கை என்றாகிய பின்
வருந்துவதில் ஏது பயன்
படைத்தவனில் பிழையேது படைப்பில் எக்குறையும்
இல்லை...
இருந்தும் ஏற் பத்துவருடங்களில்
நடைப்பிணமாக்கிவிட்டான்
நானாக தேடியதில்லை ...
ஏன் கொடுத்தானோ..
பலரின் இன்முக வார்த்தைகள் நம் முகத்தில் சிறு
புன்னகை...
வாழ்வில் இழந்ததை எண்ணி ஏது பயன்
வாழ்வின் எச்சங்களை கொஞ்சமாவது ரசிக்க
நினைக்கும் எம் வாழ்வில்
மரணம் ஒன்றே விடுதலை

– நன்றி ஜெயகாந்தன்






## இழந்ததை எண்ணி வருந்துவதில் ஏது பயன்?

எண்ணற்ற சோகம் என் உள்ளத்தில்
இல்லாமலில்லை இருந்தபோதும்
சோர்ந்து நான் வீழவுமில்லை
வீழ நினைக்கவும் இல்லை
மகிழ்வது நான் தேடி செல்ல இடர்
அது தொடர்கிறது
என் வாழ்வில் மட்டும் ஏன் இந்த சோகம்
எனக்கு தெரிந்துமோ தெரியாமலுமோ
யாருக்கும் தீங்கு செய்ய நினைப்பதில்லை
மறு ஜென்மவாது இவ்வாறான துன்பங்களை
சுமக்காமல் இருக்க வேண்டுகிறேன்
மற்றவர்களுக்கு சுமையாகும் நிலைவந்தால்
என் காலத்தை முடித்துக்கொள்வேன்
என்று என் சிந்தையில் வைத்துள்ளேன்.

- நன்றி மன்னார் பெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் சக்கர நாற்காலி

துன்பத்தில் இன்பம் கொள்ளும்
என் சக்கர நாற்காலி...
வாழ்வில் எனக்காக சுழலும் சக்கர நாற்காலி ...
இன்று மூன்று தினங்கள் ஒய்வுக்காக
என்னையும் ஓய்வெடுக்க வைத்து
அதுவும் ஓய்வெடுக்கின்றது.
உன் சக்கரங்கள் சுழலவில்லையேனில்
நம் வாழ்வும் மூலையிலேதான்
உணர்கின்றேன் இன்று
வாழ்வின் வேதனைகளோடு...
சக்கரங்களை கொண்ட வண்டியில்
அமர்திருக்கும் நாம் ஒவ்வொருவரும்
தாங்கிக்கொள்ளும் துன்பங்கள்
யார் அறிவாரோ அறிய மாட்டாரோ
அச்சக்கர வண்டி நன்கறியும்
எம் உடல் கல்லறையில் புகும் போது
அச் சக்கர நாற்காலி மகிழ்வோடு வழியனுப்பும்
ஏனெனில் அவன் அனுபவித்துவரும்
துன்பங்களில் இருந்து
இன்றுதான் விடைபெறுகின்றான் என்று...

- நன்றி ஜெயகாந்தன்





## என் கண்களும் உள்ளமும் கூறுகிறது

பலர் நடக்க வேண்டும் என்பதற்காய்
நீ நடைபிணமானாய் – ஆதலால்
வருந்தாதே
போற்றுவார் உள்ளவரை போற்றினார்கள்
கவலை மறந்து கற்பனையில்
ஆறு குளம் என்ன ஆழக்கடல் வரை
நடந்து திரிந்த ஏறி இறங்கிய கால்கள்
இன்று காலங்கள் மாறியதால் கரைகிறேன்
கற்பனையிலும் கூட
என் கவலை மறக்க என்னுடன் கூடி
மகிழ்ந்து திரிந்த என் தோழமை உறவுகளை
தேடி எழுந்து நடக்க முயல்கிறேன்
முடியவில்லை சமூகம் எனை கைவிட்டதால் ...
ஓர் மாற்றுத்திறனாளியின் உள்ளக்கிடக்கையை
என்னுடன் பகிர்ந்த போது உள்ளத்தில் உருவான பதிவு
தோழமையோடு...

– நன்றி. முகுந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The annual sports festival of the Differently Able Tamil People

The sports event of Differently Able Tamil People organised by the Differently Able Tamils Association (DATA) will be held in the North and East of the island of Sri Lanka. The events which were inaugurated in 2016 will be held this year from 24th July 2017 to 6 August 2017 in various stages.

## The Differently Able Tamils

The war, natural disasters and accidents have made a number of our people, differently abled. The events aim to provide them an opportunity to demonstrate their abilities and as a morale booster and address their mental and physical well being.

In addressing the needs and challenges faced by Differently Able people we are confronted with a number of questions. Such as,
How many differently able people are there in the community?
How are they managing their lives? and
What are the challenges they face?

The voice for their betterment has to emanate from within. Are they motivated and have the capacity to do so?.

### What is the responsibility of the wider community?

Through these sporting events we intend to shed light onto the plight of our differently able people and garner support from the wider community. Their determination and courage despite their setbacks demonstrated at these events show us what they can achieve with a little help from the wider community.

**Frequently Asked Questions**

### Where are these events held?

The events will be held in Kilinochci in the North and Batticaloa in the East.

### When are these events held?

From 24 July 2017 to 06 August 2017.

### Who is coordinating these events?

Differently Able Tamils Association (DATA)
All the events are coordinated by Differently Able people. Various representatives of differently able persons and their organisations such as "Uyirilai" and Batticaloa District Differently Able Persons' Societies have come together under an umbrella organisation "Differently Able Tamils Association (DATA)" working for their betterment.
By identifying each differently able person with a subgroup based on the extent and type of disability they have, we will be able to provide appropriate targeted support to improve their quality of life.

1. **Uyirilai** - For those who suffered spinal chord injuries
2. **Vizhigal**- For those who have visual impairment.
3. **Karangal** - For those who have disability in use of their upper limbs
4. **Paathangal** - For those who have disability in use of their lower limbs
5. **Ullam** - For those who have mental health issues
6. **Osai** - For those with speech and hearing impairment

The general members of DATA and the members of its executive committee shall all be differently able persons. Other well wishers shall support their activities.

This year the coordination of the events will be led by, Batticaloa DDAS in the East and Uyirilai in the North .

### What sporting activities are planned?

Competitors will be given the opportunity to take part in sporting events appropriate to their

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

subgroup. These events are identified with the guidance of medical and sports experts in differently abled's sporting activities.

**Events planned include**

1. Cricket for Visually Impaired
2. Wheelchair Marathon
3. Wheelchair Netball
4. Volley Ball for those with loss of lower limbs

Various suitable field events based on different abilities.

### Who and how many are participating?

The event is open to all the differently abled persons living in the North and East. It is expected that over 1500 will take active part in these events

### Who Supervises these Events?

Provincial and District Sports Officials and Health Professionals will supervise these events

### What are the challenges?

The biggest challenge in organising this event is finance. We intend to raise specific funds for this event. We are confident that our community will support this event by donating generously.

The next challenge we face is brining out those reluctant differently abled persons to come forward and take part in their event. They need all the encouragement and logistical support for training and transportation.

### What experience do you have in organising such an event?

We had organised an event in 2015 in which only those who had suffered spinal chord injuries with paralysis of their lower limbs. Marathon, Netball and Volleyball for competitors on wheelchair were the main events.

In 2016 we extended the event to include all the differently abled persons. It was a great success and gave us the impetus to organise a much bigger event.

Building on this success, we plan to have competitions at provincial level to identify teams and individuals who can compete at national and international levels.

### What are your plans for recognising non-sporting talents of the differently able Tamils?.

We intend to organise events that recognise non-sporting talents such are arts & crafts, fine arts etc. in the future

### Who do you intend to felicitate at these events?

Those who have fought the life's challenges with courage and determination will be honoured at these events.

### What do you intend to achieve by these competitions?.

Identify the number of differently abled persons in the community.
Identify their talents and different abilities.
Identify size of each subgroup and their needs
Target appropriate support.

### Where can I get more information?

Visit our website on www.tamilparasports.com

**Finally we are counting on your generous support for this event in every way possible. Business people can support us by sponsoring their chosen sporting activity.**
**Other ways to contribute towards this event are available on our website.**

The funds raised will be used for conducting these events and all surpluses will be used for strengthening the administrative structures of the differently able community and for creating livelihoods for the differently abled.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**OFFICIAL PARTNER** **JOINT PARTNER**

IBC தமிழ்

RAY OF HOPE
நம்பிக்கை ஒளி

## Main Sponsors (£5000)

*This major sponsorship package includes:*

Two banner stands at prominent place in the indoor or outdoor stadium.

Logo will be printed on one prominent places in T shirt

This package includes the banner design and print. Year Long listing on Website.

Acknowledgment through the PA system in the event proceeding time

Full colour cover page advertisement in the Tamil Para Sports 2017 souvenir.

Specially designed screen with sponsor's name/logo will be covered behind the victory stand (Main prize giving stand) along with the other sponsors.

Your organisation's logo/name on the Tamil Para Sports 2017 leaflets

## Co - Sponsors (£2000)

*(5 slots currently available)*

*This package includes:*

Two banner stands at the prominent place in Tamil Para Sports Dinner.

One banner stands at prominent place in the indoor or outdoor stadium.

This package includes the banner design and print. Year Long listing on Website.

Acknowledgment through the PA system in the event proceeding time

Full colour page advertisement in the Tamil Para Sports 2017 souvenir.

Specially designed screen with sponsor's name/logo will be behind the victory stand (Main prize giving stand) along with the other sponsors.

Your organisation's logo/name on the Tamil Para Sports 2017 leaflets

## Joint Sponsors (£1000)

One banner stands at the prominent place in Tamil Para Sports Dinner.

One banner stands at prominent place in the indoor or outdoor stadium.

This package includes the banner design and print. Year Long listing on Website.

Acknowledgment through the PA system in the event proceeding time

Full colour page advertisement in the Tamil Para Sports 2017 souvenir.

Specially designed screen with sponsor's name/logo will be prominently covered behind the victory stand (Main prize giving stand) along with the other sponsors.

Your organisation's logo/name on the Tamil Para Sports 2017 leaflets

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Para Sports 2017

## Sponsors Registration / Donation Form

Name:..........................................................................................................................................

Address:......................................................................................................................................

E Mail:........................................................................................................................................

Telephone:..................................................................................................................................

Company Name:........................................................................................................................

Contact Person: .........................................................................................................................

**SPONSOR PLAN**

Main Sponsor: ...........................................................................................................................

Co – Sponsors:...........................................................................................................................

Joint Sponsors: ..........................................................................................................................

Gold Advertisement: .................................................................................................................

Silver Advertisement: ................................................................................................................

Bronze Advertisement:...............................................................................................................

Other Contribution:.....................................................................................................................

***Bank Details***

*Account Name:* ***Tamil Para Sports***
*Bank : Lloyds*
*Sort Code: 30 98 90*
*Account No: 15667968*

*Bank Account Details in Sri Lanka:*
*Account Name :* ***Uyirilai***
*Account No : 79147248*
*Bank Of Ceylon - Vavuniya*

*Terms and Conditions apply: Please visit www.tamilprasports.com*
*Tamil Para Sports is a Non Profit Organization registered in England & Wales. Registered No 10221119*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OTHER PACKAGES

### Gold Advertisement (£500)

Prominent page advert in souvenir

Year Long listing on Website

Frequent recognition in Facebook and other promotional material for 1 year

Specially designed screen with sponsor's logo will be behind the victory stand (Main prize giving stand) along with the other sponsors.

Your business will be individually acknowledged as a contributor in our Facebook.

### Silver Advertisement (£250)

Full colour page advert in souvenir

Year Long listing on website.

Your business will be individually acknowledged as a contributor in our Facebook.

### Bronze Advertisement (£150)

Half colour page advert in souvenir

Year Long listing on website.

Your business will be individually acknowledged as a contributor in our Facebook.

### Other Contribution

Contribution toward Prizes , Awards, Donations to the Differently able Tamils who participate Tamil Para Sports.

£75 | £50




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KOMATHA FARM PROJECT



In order to secure the foundation of their livelihoods and to encourage enterprise, the differently able people are coming together to create a large scale farming industry.
Having successfully run small scale farms to sustain their own livelihoods, they wish to join forces to create dairy farms at a larger scale. As the first step, a diary farm will be established in Vanni followed by another one in Batticaloa.

Any surplus funds generated in the upcoming sports events for the differently able people, will be invested in setting up these dairy farms. In addition, these projects need further investment.

The differently able people are appealing for your support for setting up this enterprise.

## கோமாதா பண்ணைத் திட்டம்

மாற்றுத் திறனாளிகளின் தொழில் முயற்சியை ஊக்கப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கோடு தொழிற்பண்ணைகளை உருவாக்கும் முயற்சியில் மாற்றுத் திறனாளிகள் ஈடுபடுகின்றனர்

சிறிய அளவில் வீட்டு பண்ணைகள், தோட்டங்களை நடாத்தி, தமது உழைப்பில் வாழும் மாற்றுத்திறனாளிகள் கூட்டாக இணைந்து பெரும் பண்ணைகளை உருவாக்க விளைகின்றார்கள்.

இந்த முயற்சியில் முதற்கட்டமாக இரு பாற்பண்ணைகள் நிறுவப்படுகின்றது. முதலாவது பண்ணை வன்னிப்பகுதியிலும் அடுத்த பண்ணை மட்டக்களப்பிலும் அமைக்கப்படும்.

விளையாட்டு போட்டிகளுக்காக சேர்க்கப்படும் நிதியில், விளையாட்டு போட்டிகளுக்கு செலவாகும் நிதி, மாற்றுத் திறனாளிகளை நிறுவனமயமாக்கி வளர்க்க தேவையான நிதி தவிர மீதமான அனைத்து பணமும் இப்பண்ணைகளில் முதலிடப்படும்.

மாற்றுத் திறனாளிகளின் தொழில் முயற்சியில் நீங்களும் ஒரு பக்காளராக இணைய தமிழ் மாற்றுத் திறனாளிகள் உங்களை அழைக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contributors to Tamil Para Sports 2016

www.tamilparasports.com tamilparasports admin@tamilparasports.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org